LIBRARY
1 - JUL 1958
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, the 10th February 1958.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—CONDOLENCE RESOLUTION ON THE DEATH OF SRI BULUSU SAMBAMURTHY, FORMER SPEAKER OF THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

MR. SPEAKER : உங்கள் எல்லோரையும் இந்த சட்டசபைக் கூட்டத்திற்கு மனமார வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக, நமது சட்ட சபையின் முதல் சபாநாயகராக இருந்த கனம் புலுசு சாம்பமூர்த்தி அவர்கள் இறந்துபோன செய்தியை வருத்தத்துடன் இந்தச் சபைக்கு நான் தெரிவிக்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சபை ஆரம்பிக்கும்போது ஒரு வருத்தமான செய்தியுடனும், அந்த வருத்தத்தைத் தெரிவிக்கக் கூடிய ஒரு தீர்மானத்துடனும் ஆரம்பிக்க வேண்டியிருப்பது வருந்தக்கூடிய விஷயம். இந்தத் தீர்மானத்தைச் சபை முன் வெகு வருத்தத்துடன் சமர்ப்பிக்கிறேன்.

" This House places on record its deep sense of sorrow at the passing away on the 2nd February 1958 of Sri Bulusu Sambamurthy, former Speaker of the Madras Legislative Assembly and requests the Hon. Speaker to convey to the members of the bereaved family its sympathy with them in their great loss. "

நம்முடைய ராஜ்யத்தில், தேச சுதந்திர இயக்கத்தைப் பற்றித் தெரிந்தவர்கள் எல்லோருக்கும் ஸ்ரீ புலுசு சாம்பமூர்த்தி அவர்களுடைய பெயர் நன்றாகத் தெரிந்திருக்கும். அவர்களை முதன் முதலில் 1932-ம் வருஷம் வேலூர் சிறையிலே சந்தித்துப் பழகக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர்கள் பயம் என்பதே இன்னது என்று அறியாதவர். அவர் தன்னுடைய கடமையை—கடமை என்று எதை உணர்ந்திருந்தாரோ அதை—தைரியமாக, எவ்வித எதிர்ப்புகள் வந்தாலும், எவ்வித சங்கடங்கள் வந்தாலும், உறுதியாக நின்று, செய்யக்கூடிய ஒரு ஆற்றலைப் பெற்றிருந்தார். அவர்களுடைய வாழ்க்கை இளைஞர்களுக்கு அந்தக் காலத்தில் பெரிய ஊக்கத்தையும் நல்ல ஆர்வத்தையும் உண்டாக்கக் கூடியதாக அமைந்திருந்தது.

அவர்கள் 1886-ம் வருஷம் மார்ச்சு மாதம் 4-ந் தேதி கிழக்குக் கோதாவரி ஜில்லாவில் ஒரு கிராமத்தில் பிறந்தவர். இங்கு நம்முடைய சென்னை சர்வகலாசாலையில் படித்துப் பட்டம் பெற்று, கொஞ்ச நாட்கள் விஞ்ஞான ஆசிரியராகவும் வேலை பார்த்தார். அப்பொழுது படித்தவர்கள் எல்லோரும் ஒன்று, உத்தியோகத்திற்குப் போகவேண்டும், இல்லாவிட்டால் வக்கீல்களாகப் போகவேண்டும் என்ற சம்பிரதாயம் தான் இருந்து வந்தது. அதையொட்டி அவரும் சட்டக் கல்லூரி சென்று, சட்டப் பயிற்சி பெற்று, வக்கீலாகவும் கொஞ்ச நாள் வேலை பார்த்து வந்தார். 1919-ம் வருஷத்தில் " ஹோம் ரூல் " இயக்கத்திலே ஈடுபட்டு, அதற்குப் பிற்பாடு ஒத்துழையாமை இயக்கத்திலும் ஈடுபட்டு, தம்முடைய வக்கீல் வேலையை விட்டு, தேச சேவையையே தம்முடைய வாழ்க்கையாக அன்று முதல் ஏற்றுக்கொண்டார்.

1927-ல் நடந்த நாகபுரி சத்தியாக்கிரகத்தில் அவர் கலந்து கொண்டார். 1928-ல் இந்துஸ்தான் சேவா தால் என்ற தொண்டர் படையின் தலைவராகவும் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1928-ம் வருஷத்தில், நம்முடைய

மதிப்பிற்குரிய காலஞ்சென்ற ஸ்ரீ எஸ். ஸ்ரீனிவாச அய்யங்கார் அவர்கள் தலைவராக இருந்தபோது, காங்கிரஸ் காரியக் கமிட்டியிலும் அவர் இடம் பெற்றிருந்தார்.

ஸைமன் கமிஷன் வந்தபோது, அதைப் பகிஷ்கரிப்பதற்கான இயக்கத்தில் அவர்கள் பெரும் பங்கு எடுத்துக்கொண்டார்கள். அதன் காரணமாக அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டதும் நமக்கு ஞாபகம் இருக்கலாம். அதற்குப் பிறகு, உப்பு சத்தியாக்கிரகத்தில் 1930-ம் வருஷத்தில் கலந்து கொண்டார். 1932-ம் வருஷத்தில் ஒத்துழையாமை இயக்கம் நடந்த போது, அவர்களுக்கு மறு முறையும் சிறை செல்லக் கூடிய வாய்ப்பு கிடைத்தது, என்று நான் சொல்லிக் கொள்கிறேன். காக்கிநாடாவில் அவரைப் போலீசார் தாக்கினார்கள். அந்தத் தாக்குதலினால் அவர்கள் இறந்து விட்டார்கள் என்று நினைத்து அவர்களைப் போலீசார் விட்டு விட்டுப் போய் விட்டார்கள். ஆனால், அவர்களுடைய உயிர் அவ்வளவு சிக்கிரமாக இவ்வுலகத்தை விட்டு நீங்கக்கூடியதாக இல்லை. அவர்கள் வாழ்ந்திருந்து, நாடு சுதந்திரம் அடைந்ததைப் பார்த்து, அதற்குப் பிற்பாடு இவ்வுலகை விட்டு நீங்க வேண்டுமென்ற விதி இருந்த காரணத்தால் அவர்கள் அப்பொழுது தெய்வாதீனமாகப் பிழைத்தார்கள்.

1924-ம் வருஷத்திலே காக்கிநாடா காங்கிரஸ் நடந்தபோது அதிலே அவர்கள் பெரும் பங்கு எடுத்துக் கொண்டார். அப்பொழுது அவர் ஒரு கர்ம வீரர் என்பதை விளக்குவதற்கான ஒரு நிகழ்ச்சி நடந்தது என்பதை கனம் அங்கத்தினர்களுக்கு நான் ஞாபகமூட்ட விரும்புகின்றேன். அந்தக் காங்கிரஸ் மகாசபை நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்புதான் அவருடைய மகன் இறந்து போய் விட்டார். இருந்தாலும், அதைப் பொருட்படுத்தாமல், தொடர்ந்து காங்கிரஸ் வேலையில் ஈடுபட்டு, காங்கிரஸை வெற்றிகரமாக நடத்திக் கொடுப்பதற்குத் தம்முடைய உழைப்பு முழுவதையும் கொடுத்தார்—தம்முடைய துக்கத்தையும் மறந்துவிட்டு.

1937-ம் வருஷத்தில் நடந்த தேர்தலில், சென்னை சட்ட சபைக்கு அவர் ஒரு அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்குப் பிற்பாடு சபா நாயகராகவும் இங்கு விளங்கினார். யுத்தத்தின் காரணமாக இங்கு இந்தச் சட்டசபை கலைக்கப்படுவதற்கு முன்பே, இங்கு இருந்த மந்திரி சபை ராஜினாமா செய்ய வேண்டியதாக ஏற்பட்டது. இருந்தாலும், இந்தச் சபை கலைக்கப்படும் வரையில் அவர்கள்தான் தலைவர் என்ற முறையிலே இருந்திருக்கிறார்கள். அவர்கள் நாட்டுக்குச் செய்திருக்கும் சேவை எல்லோராலும் போற்றுதற்குரிய முறையிலும், நம் எல்லோருக்கும் ஒரு எடுத்துக்காட்டாகவும் அமைந்திருக்கிறது என்பதை தெரிவித்துக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை நாம் நிறைவேற்றுவதுடன், சபாநாயகரை இந்தத் தீர்மானத்தினுடைய நகலை அவர்களுடைய குடும்பத்தாருக்கு அனுப்பி வைத்து, இந்தத் துக்கத்தில் நாமும் கலந்து கொள்ளுகிறோம் என்ற செய்தியை அவர்களுக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அதன் மூலம் நாட்டிலே இருக்கும் எல்லா மக்களும் அவர்களுடைய மறைவில் துக்கம் கொள்ளுகிறார்கள் என்கிற செய்தி ஓரளவு அவர்களுக்கு சற்று ஆறுதல் அளிக்கும் என்று நம்புகிறேன். அவர் நன்றாக வாழ்ந்து, அரிய சேவைகள் செய்து, முதிர்ந்த வயதிலே நம்மைவிட்டுப் பிரிந்திருக்கிறார்கள். அவர்களுடைய ஆன்மா சாந்தி அடையுமாறு நான் பிரார்த்தித்துக்கொள்ளுகின்றேன்.

Sri V. K. RAMASWAMY MUDALIAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை நானும் மனப்பூர்வமாக ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் மட்டும் சொல்கின்றேன். நிதி அமைச்சர் அவர்கள் சொன்னபடி, ஸ்ரீமான் புலுசு சாம்பமூர்த்தி அவர்கள் தேச சுதந்திர இயக்கத்தில் ஈடுபட்டு, தேச பிதாவுடன் ஒத்துழைத்து, சுதந்திரத்தை வாங்கிக்கொடுத்த முக்கியமானவர்களில் ஒருவர். அவருடன் எனக்கு நேரிடையாகப் பரிச்சயம் இல்லாதபோதிலும் அவர்கள் செய்து வந்த பணிகளையெல்லாம் நன்றாகக் கவனித்து வந்திருக்கிறேன். அவர் இந்தச் சட்ட

10th February 1958] [Sri V. K. Ramaswamy Mudaliar]

சபையின் சபாநாயகராக வீற்றிருந்த காலத்தில் நான் ஒரு அங்கத்தின ராக இல்லாதபோதிலும் பார்வையாளர்கள் காலரியிலிருந்து சட்டசபை நடவடிக்கைகளைக் கவனித்தபோது, அவருடைய ஆற்றலை அனேக தடவை கவனித்து வந்திருக்கிறேன். அவர் வெகு திறமையுடன் சபாநாயகர் பத வியை ஏற்று நடத்தி வந்தார். அவர்களுடைய சேவைகளைப் பற்றியெல் லாம் நிதி அமைச்சர் அவர்கள் சொல்லி வந்தது அவ்வளவும் உண்மை யானவை. அவை மிகவும் போற்றத்தக்கவை. அன்னாருடைய ஆத்மா சாந்தி அடையவேண்டுமென்று சொல்லிக்கொண்டு நானும் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கின்றேன்.

SRI M. P. SUBRAMANIAM : அவைத் தலைவர் அவர்களே, 1937-ல் இந்தச் சட்ட சபையின் தலைவராக இருந்த திரு. புலுசு சாம்ப மூர்த்தி அவர்கள் மறைந்துவிட்ட காரணத்தினால் இந்தச் சபை முன் வந்திருக்கும் அனுதாபத் தீர்மானத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் முழுப்பங்கு கொள்ளுகிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, நானும் என்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

* SRI M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பிலே, சர்க்கார் கட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தையும், அவர்கள் கூறிய கருத்துக்களையும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறிய கருத்துக்களையும் நான் ஆமோதிக் கிறேன.

புலுசு சாம்பமூர்த்தி அவர்கள் ஆந்திரர்களுக்கு மட்டும் சொந்தமான வர்கள் அல்ல. உண்மையிலேயே அவர்கள் சென்னைக்கு உரியவர். அவ ருடைய அரசியல் வாழ்க்கையின் பெரும்பாகம் சென்னையை நடுநாயகமாக வைத்துத்தான் நடந்திருக்கிறது. ஆகையால், ஆந்திர மக்களைவிட தமிழ் மக்கள்தான் இந்தத் துக்கத்திற்கு அதிகமாக உரியவர்கள்.

நாம் சுதந்திரம் அடைந்த பிறகு நம் தேசத்தை முன்னுக்குக் கொண்டு போவதில் பல கருத்து வித்தியாசங்கள் இருந்த போதிலுங்கூட, நம்முடைய தேச விடுதலைப் போரில் முன்னணியில் நின்றவர்களின் சரித் திரத்தை நாம் கேட்கும்போது மனது உருகுகிறது. நாம் எல்லோரும் பெருமைப்படக்கூடியதாகவும் இருந்திருக்கிறது. அத்தகைய முன்னணி வீரர்களில் கனம் புலுசு சாம்பமூர்த்தி அவர்களும் ஒருவர் என்பதில் சந்தேகம் இல்லை. அப்பேர்ப்பட்டவர்களுடைய மறைவுக்காக நாம் எல்லோரும் வருத்தத்தைத் தெரிவிப்பது நியாயம். அந்த அடிப்படையில் இந்தச் சபையின் நடவடிக்கையை ஒத்திவைப்பதற்காகக் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தை நான் ஆமோதிக்கிறேன்.

* SRI S. PAKKIRISAMI PILLAI : கனம் தலைவர் அவர்களே, நமது புலுசு சாம்பமூர்த்தி அவர்கள் மறைவினால் நம் நாட்டுப் பழம் பெரும் தலைவர்களிலே ஒருவர் மறைந்திருக்கிறார். நம் நாட்டின் தேசீய இயக்கத்திற்கு ஸ்ரீமான் சாம்பமூர்த்தி அவர்கள் பெரும்பாடுபட்டு முக்கிய மாக தமிழ் நாட்டிலும், ஆந்திர நாட்டிலும் இருக்கும்படியான இளைஞர் களுக்கு அதிகமான ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அளித்து வந்திருக் கிறார். அவர்களுக்குக் கீழ் தொண்டனாக இருந்து சென்னை நகரத்தில் பணியாற்றக் கூடிய பாக்கியம் எனக்கு இருந்தது. நான் அவர்களுக்குக் கீழ் வேலை செய்திருக்கிறேன். அவர்களிடத்தில் ஒரு முரட்டுப் பிடிவாதம் நாட்டின் நன்மைக்காக எப்போதும் இருந்து வந்திருக்கிறது. அந்தப் பிடிவாதம் தான் அவர்களோடு வேலை செய்த இளைஞர்களுக்கு எல்லாம் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் மிக அதிகமாக அளித்திருக்கிறது. நம் நாட்டின் விடுதலைக்காக ஸ்ரீமான் புலுசு சாம்பமூர்த்தி அவர்கள் ஆற்றி யிருக்கிற பணியும், அதற்கு அப்பாலும் அவர்கள் செய்திருக்கிற சேவை களும் என்றென்றும் மறையாதவை. ஒவ்வொரு காரியத்திலும் அவர் கள் காட்டியிருக்கிற உற்சாகம், தைரியம், இவற்றை நான் கடைசி வரையில் பார்த்திருக்கிறேன். அவர்கள் ஆன்மா சாந்தி அடையவேண்டுமென்று என் கட்சியின் சார்பில் நான் சொல்லிக் கொள்ளுகிறேன்.

8–40 a.m.

[10th February 1958

SRI P. S. CHINNADURAI : கனம் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய புலுசு சாம்பமூர்த்தி அவர்கள், ஜனநாயக ஆட்சிக்குரிய விடிவெள்ளி தோன்றியவுடனே இந்தச் சபையை அலங்கரித்த பழம்பெரும் தேச பக்தர் ஆவர். அவர் இன்று வரையில் தேசீய ஒருமைப்பாட்டின் சின்னமாகவும், தேசபக்தி என்பதற்கே இலக்கணமாகவும் விளங்கி வந்திருக்க, இன்று நம்மிடம் இல்லாது அவர் மறைந்தது நம்முடைய துர்பாக்கியம் என்றே கருதுகிறேன். தேசீய ஒருமைப்பாடு தற்போது குன்றி வருகிறதோ என்ற ஐயம் தோன்றியிருக்கும் காலத்தில் அவர் நம்மை விட்டுப் பிரிந்து விட்டதால் வாழ்கின்ற தலைமுறையினரின் பொறுப்பு அதிகமாகச் சுமந்திருக்கிறதென்பதை உணர்கிறேன். அவர் எந்த லட்சியங்களுக்காக வாழ்ந்தாரோ அந்த லட்சியங்களில் இருந்து சிறிதும் வழுவாது நாம் செயல்படுவதே நம்முடைய விஸ்வாசத்தை இன்று தெரிவிப்பதாகும். அதற்குரிய மனோ பக்குவத்தை, மனோபலத்தை அவரது ஆன்மா நமக்கு அளிக்க வேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டு, கனம் நிதி அமைசசர் அவர்கள் கொண்டு வநதிருககிற தீர்மானத்தை எங்கள் கட்சியின் சார்பில் ஆதரிக்கிறேன்.

MR. SPEAKER : நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தில் நானும் கலந்து கொள்ள விரும்புகிறேன். காலஞ்சென்ற புலுசு சாம்பமூர்த்தி அவர்கள் இந்தச் சபையின் முதல் சபாநாயகராக இருந்திருக்கிறார். அவர் இந்த ஸ்தானத்தை மிகுந்த தைரியத்துடன் வகித்து அலங்கரித்திருக்கிறார். நம்முடைய தேச விடுதலைப் போராட்ட இயக்கத்தில் அவர் பெரிய பங்கு எடுத்துக் கொண்டு நம் எல்லோருக்குமே வழிகாட்டியாக இருந்தார். அவருடைய மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானத்தை நான் முழு மனதுடன் ஆமோதிக்கிறேன். இந்தத் தீர்மானத்தை முழுமனதுடன் எல்லோரும் ஆமோதிப்பதற்கு அடையாளமாக ஒரு நிமிஷம் எல்லோரும் மௌனமாக எழுந்திருந்து நிற்கவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

(சபை ஒரு நிமிஷம் மௌனமாக எழுந்து நின்று தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியது)

அவருக்குக் கௌரவம் அளிக்கும் முறையில் இந்தச் சபையை நான் 9–00 (ஏ.எம்.) மணி வரையில் ஒத்திவைக்கிறேன்.

(The House reassembled at nine of the clock.)

II.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Bhavanisagar National Extension Scheme

9 a.m. *1 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of villages from Satyamangalam and Talavadi firkas which have been included in the Bhavanisagar National Extension Scheme ;

(*b*) the amount allotted for 1957–58; and

(*c*) the works taken up for execution?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Twenty-three villages from Satyamangalam firka and 22 villages from Talavadi firka.

(*b*) Rs. 2,61,100.